1981 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நீதிபதிகள் தேவை மட்டுமின்றி நிர்வாகத்திலே சில மாற்றங்களை நடைமுறைப்படுத்தினால், வழக்குகளைத் தீர்ப்பதில் காலதாமதம் இருக்காது என்பதை அரசு உணர்ந்து இதுகுறித்து உயர்நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருக்கிறது. உயர்நீதிமன்றம் அவற்றை ஆய்ந்து நடைமுறைப்படுத்த ஆவன செய்து வருகிறது.

Prisoners Reform Measures.

* 82 *Q.*—THIRU P. R. THOMAS : (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state—

(*a*) whether there is any co-ordination between the work of the Discharged Prisoners Aid Society and the prisoners reform measures taken by the Jail Officials and the Probation Officers ;

(*b*) if so, whether there is any proposal to appoint a Committee to suggest better co-ordination ; and

(*c*) the stage at which the matter now stands ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) கேள்வி எழவில்லை.

தென்காசி முன்சீப் நீதிமன்றம்.

* 83 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியிலுள்ள முன்சீப் நீதிமன்றத்தில், 1980, ஜூன் முதல் 23—9—1980 வரை, முன்சீப் நியமனம் செய்யப்படாததால், அந்நீதி மன்றம் செயல்படவில்லை என்பது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(உ) அந்நீதிமன்றத்தில் 23—9—1980 வரை தீர்ப்பளிக்கப்படாமலிருக்கும் வழக்குகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை (மூன்சிப் பதவி மாற்றங்களை உயர்நீதிமன்றமே செய்கிறது).

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) 23—9—1980 அன்று 2352 வழக்குகள் தீர்ப்பளிக்கப்படாமல் இருந்தன.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, தென்காசி மூன்சிப் நீதி மன்றத்தில் சுமார் ஆறு மாத காலத்திற்கு நீதிபதி இல்லாமல் இருந்ததால், வழக்குகள் எல்லாம் மாற்றப்பட்டு வந்தன. அங்கேயிருந்த நீதிபதி விடுப்பு எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். அவருக்குப் பதிலாக வேறு யாரையும் நியமிக்கவில்லை. இது குறித்து அந்தப் பகுதியில் உள்ள வழக்கறிஞர்கள் சங்கத்திலிருந்து கூட அரசுக்கு முறையீடு வந்துள்ளது. வழக்குகளைப் பதிவு செய்தவர்களிடமிருந்தும் முறையீடு வந்துள்ளது. 19—9—1980 இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் இது குறித்து செய்தி வந்துள்ளது. அப்படி இருக்கும்போது, அரசுக்குச் செய்தி இல்லையென்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறார்கள். ஆகவே திரும்ப பரிசிலனை செய்து பதில் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போல, ஆறு மாத காலமாக நீதிபதி அங்கு இல்லாமல் இல்லை. 11—8—1980 முதல் 4—11—1980 வரைக்கும் நீதிபதி விடுப்பில் சென்றிருந்தார். அவர் தொடர் விடுப்பில் செல்லாமல் இருந்ததாலும், மாற்று நீதிபதி ஏற்பாடு செய்ய நீதிபதிகள் இல்லாமல் இருந்த காரணத்தாலும், உயர்நீதிமன்றம் நியமிக்க வில்லை. இது குறித்து அரசே உயர்நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருக்கிறது. உயர்நீதிமன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

Encroachment on empty site on Halls Road, Kilpauk.

* 84 *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that hutments were put up by unauthorised persons on an empty site (Old Burial Ground of the Corporation) on Halls Road, Kilpauk, adjacent to Bala Vihar Home, in the second week of August, 1980 .

(*b*) whether it is also a fact that, soon after the removal of these hutments by the Police, they were once again put up by the encroachers ; and

(*c*) if so, the authority which granted the permission for the same ?